

மிக்ஜாம் புயல் – கன மழையைத் தொடர்ந்து கழக அரசு பல்வேறு நிவாரணப் பணிகளை இடைவிடாது மேற்கொண்டு வருகிறது. அரசின் இந்த முயற்சிக்கு துணை நிற்கிற விதமாக, நிறுவனங்கள் – இயக்கங்கள் – தனிநபர்கள் என பலரும் முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு நிதியளித்து வருகின்றனர். இந்நிலையில், நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, நடிகர் சிவகார்த்திகேயன் சந்தித்து ரூ.10 லட்சத்துக்கான காசோலையை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக வழங்கினார்.



சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் கடந்த வாரம் பெய்த கன மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை கழக அரசு சீரமைத்து வருகிறது. இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.10 லட்சத்துக்கான காசோலையை, ஈரோடு அன்னை இன்ஃப்ரா ப்ராஜக்ட்ஸின் நிறுவனர் எஸ்.அசோக்குமார், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஈரோடு கே.ஈ.பிரகாஷ் உடன் உள்ளார்.



சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழை ஏற்படுத்திய பாதிப்பினைச் சீர்செய்வதோடு, பொதுமக்களுக்கு நிவாரண உதவிகளையும் கழக அரசு வழங்கி வருகிறது. அரசின் இந்தப்பணிகளுக்கு துணை நிற்கும் விதமாக, முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு எம்.எஸ்.எம். மூவி டிரேடர்ஸ் சார்பில் ரூ.5 லட்சத்திற்கான காசோலையை, தயாரிப்பாளர் செண்பக மூர்த்தி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.



மிக்ஜாம் புயல் கன மழை வெள்ளத்தைத் தொடர்ந்து கழக அரசு மேற்கொண்டு வரும் சீரியப் பணிகளால், இயல்பு நிலை திரும்பி வருகிறது. அரசுக்கு பக்கபலமாகத் துணை நின்றிடும் வகையில், தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் மாநிலத் துணைச் செயலாளர் சி.எச்.சேகர் , ரூ.2 லட்சத்துக்கான காசோலையை 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.



புயல் கன மழையைத் தொடர்ந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு அரசின் பணிகளுக்கு மேலும் வலுச் சேர்க்கின்ற வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஐ.என்.எம்.ஸ்டுடியோஸ் நிறுவனரும், திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகர்மன்றத் தலைவர் பாத்திமா பஷீரா அவர்களின் புதல்வருமான முகமது சாதிக் ரூ.1 லட்சத்துக்கான காசோலையை, நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். தயாநிதி மாறன் எம்.பி. உடன் உள்ளார்.



தி.மு.கழக மகளிரணித் தலைவர் – தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் – செயலர் விஜயா தாயன்பன், கழக அரசின் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ரூ.1 லட்சத்துக்கான காசோலையை 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'க்கு நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

### கலைஞரின் கனவு திட்டமான தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டப் பணிகள் நிறைவு!

# பாபநாசம் - மணிமுத்தாறு அணைகள் நிரம்பியதும் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படும்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தகவல்!



நெல்லை, டிச. 14 -

கலைஞர் அவர்களின் கனவு திட்டமான தாமிர பரணி, கருமேனியாறு, நம்பி யாறு இணைப்புத் திட்டப் பணிகள் முழுமை பெற்றுள் ளன.பாபநாசம் மணிமுத் தாறு அணைகள் நிரம்பியதும் வெள்ளநீர் கால்வாயில் தண் ணீர் திறக்கப்படும் என சட் டப்பேரவை தலைவர் மு.அப் பாவு அவர்கள் தகவல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேரவைத் தலைவர் மு.அப் பாவு அவர்கள் தெரிவித்திருப் பதாவது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவு திட்ட மான தாமிரபரணி - கருமே னியாறு - நம்பியாறு இணைப்பு திட்டம் 2009 ஆம் ஆண்டு 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில்திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு ரூ.215 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பாதி பணிகள் முடிக்கப் பட்ட நிலையில் 2011 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற் பட்ட பிறகு மேற்படி திட் டப் பணிகள் 10 ஆண்டுக ளாக கிடப்பில் போடப் பட்டு, மீண்டும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத லமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு சுமார் 900 கோடி ரூபாய் திட்டப் மதிப்பீட்டில் பணிகள் மீண்டும் தொடங் கப்பட்டு, தற்போது பணிகள் முடிவடைந்துள்ளன.

**கால்வாய் பணிகள் முழுமை!**

தாமிரபரணி ஆற்றில் கன் னடியின் கால்வாயிலிருந்து திடியூர் மற்றும் காரியாண்டி வழியாக எம்.எல்.தேரி வரை சுமார் 75 கிலோ மீட்டர் தூரம் வரை கால்வாய் வெட்டி, மழைக்காலங்களில் பாபநாசம், சேர்வலாறு, மணி முத்தாறு ஆகிய அணைகளில் இருந்து உபரி நீர் கன்னடியன் கால்வாய் வழியாக சுமார் 3,500 கனஅடி தண்ணீர் எடுத்து, 600 கனஅடி தண் ணீர் விஜயநாராயணன் குளத் திற்கும், 400 கனஅடி தண் ணீர் நம்பியாறு அணைக்கட்டிற்கும். 740 கன அடி தண்ணீர் கருமேனியாற் றுக்கும்.340 கனஅடி தண்ணீர் சுவிசேஷபுரம் குளத்திற்கும். 200 கனஅடி தண்ணீர் ஆனை குடி படுக்கை மற்றும் ஆயங் குளம் படுக்கை வழியாக அதி சயக் கிணற்றுக்கும். 300 கனஅடி தண்ணீர் இடையன் குடி குளத்திற்கும் செல்கிற அளவிற்கு கால்வாய் பணிகள் முழுமையாக முடிவடைந் துள்ளன.

**தடையாணை நீக்கம்!**

மேலும் 500 கனஅடி தண் ணீர் எம்.எல்.தேரிக்குக் கொண்டு செல்வதற்கு கால் வாய் அமைக்கும் பணி கூடு தல் குளம் வரை முடிவ டைந் துள்ளது. எம்.எல். தேரி குளத்திற்கு மட்டும் செல்கிற கால்வாய் வெட்டுவதற்கு நிலம் எடுப்பது தொடர்பாக விவசாயிகள் தொடுத்த வழக் கில், சென்னை உயர்நீதிமன் றத்தின் மதுரை கிளை. தடை விதித்த காரணத்தினால் பணி யில் சுணக்கம் ஏற்பட்டுள் ளது. இன்றைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு மேற்படி நீதிமன் றத்தின் தடையாணையை நீக் குவதற்குத் தேவையான ஆவ ணங்கள் அதிகாரிகளின் மூலம் சமர்ப்பித்ததன் பய னாக தடையாணை, தற் போது நீக்கப்பட்டுள்ளது. மேற்படி கால்வாய் செல் கின்ற பகுதியில் உள்ள நிலங் களை உடனடியாக ஆர்ஜிதம் செய்வதற்கு, விவசாயி களுக்கு அறிவிப்பாணை 19(1) வழங்கப்பட்டுள்ளது. 4 மாதத்திற்குள் நிலங்களை கையகப்படுத்தும் நடை முறை முழுமை பெற்று, அந் நிலத்திக்கான உரிய இழப்பீ டும் விவசாயிகளுக்கு வழங் கப்பட்டு விடும். அதன்பின் 2 மாத காலத்தில் கால்வாய் பணிகள் முழுமை பெற்று எம்.எல்.தேரிக்கும் தண்ணீர் சென்றடைந்துவிடும்.

தற்போது பாபநாசம், சேர் வலாறு, மணிமுத்தாறு ஆகிய அணைகள் முழுமையாக நிரம்பி, உபரிநீர் வெளியேற் றப்பட்டால் மட்டுமே கன்ன டியன் கால்வாய் வழியாக வெள்ளநீர் கால்வாய் மூலம் திசையன்விளை பகுதிக்கு தண்ணீர் வந்து சேரும்.

கன்னடியன் கால்வாய்க்கு கீழ் உள்ள தாமிரபரணி ஆற் றில் 5,000 கனஅடிக்கு மேல் தண்ணீர் சென்று கொண்டி ருந்தாலும், மேற்படி நீரை வெள்ளநீர் கால்வாய்க்கு கொண்டுவர முடியாத அள விற்கு வெள்ளநீர் கால்வாய் உயரமாகவும், தாமிரபரணி ஆறு பள்ளமாகவும் உள்ளது என்பதை விவசாயிகளுடைய கவனத்திற்கு அன்போடு தெரி வித்துக் கொள்கிறேன். தொடர்ந்து மழை பெய்து மேற்படி அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட் டால் மட்டுமே வெள்ள நீர் கால்வாயில் தண்ணீர் வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவை தலை வர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

### அமைச்சர் மா.மதிவேந்தன் தலைமையில்

# வனத் துறை வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

சென்னை, டிச. 14 -

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் "வனப் பாது காப்பிற்காக வனத்துறை மூலம் மேற்கொள்ளப் பட்டு வரும் வளர்ச்சி பணி கள் முன்னேற்றம்" குறித் தான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் நேற்று முன்தினம் (12.12.2023) வனப்பாதுகாப்பிற்காக வனத்துறை மூலம் மேற் கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் முன் னேற்றம் குறித்தான மாதாந் திர ஆய்வுக் கூட்டம் கிண்டி முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற் றது.

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் முன்னிலையில் துறை ரீதி யான ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டது. வனத்துறை யின் உயர் அலுவலர்கள் வனத்துறை மூலம் செயல்ப டுத்தப்படும் முன்னேற்ற அறிக்கையினை அமைச்சர் அவர்களுக்கு விளக்கிக் கூறி னார்கள்.

இவ்வாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மற் றும் பாதுகாப்பு பணிகளை ஆய்வு செய்த வனத்துறை அமைச்சர் அவர்கள், வன உயிரினங்களால் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு விரைந்து இழப்பீடு வழங் கும்படி அறிவுரைகள் வழங் கினார். மனித - விலங்கு உயிரின மோதல்களைத் தடுக்கத் தேவையான உட னடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சம்பந் தப்பட்ட அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

மேலும், நிலுவையில் உள்ள "முதல்வரின் முகவரி" சார்ந்த மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் அனை வரும் தனிக்கவனம் செலுத்தி விரைந்து முடிக்குமாறும் வனத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் தொய்வின்றி செயல்பட அனைத்து நிலை அலுவலர்க ளும் ஒருங்கிணைந்து பணி யாற்ற வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட துறை அலு வலர்களை வனத்துறை அமைச்சர் அவர்கள் கேட் டுக் கொண்டார்கள்.

இவ்வாய்வு கூட்டத்தில் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சுப்ரத் முஹ பத்ர முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ரா. ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (நிர்வாகம்) தெபாசிஸ் ஜானா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (புலிகள் திட்டம்) ராகேஷ் குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனப்பாதுகாப்புச்சட்டம்) யோகேஷ் சிங், கூடுதல் முதன்மை தலைமை வனப் பாது காவலர் (வன உயிரி னம்) நாகநாதன், இணை இயக்குநர் (விளம்பரம்) த. தமிழ்மொழி அமுது மற் றும் அனைத்து மண்டல வனப்பாதுகாவலர்கள் மற் றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை மு. இயலரசன்
### டிசம்பர் 14 (1992)



**இளமைப் பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய பின்னர் கழகக் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரப்பியவர்.**

**ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பணிக்காக தனது பணியினைத் துறந்தவர்.**

**'தன்மானம்' என்ற வார இதழ் நடத்தியவர்.**

**"ஈட்டி முனைபோல் கழகத்தின் கொள்கைகளை மேடைகளில் எடுத்தெறிந்து வீசுபவர்" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


### ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு

# ஓர் ஆம்புலன்ஸ் என்பதே இலக்கு!

## டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!



புதுடெல்லி, டிச. 14 -

குறைந்தபட்ச மருத்துவ உபகரணங்கள் இல்லாமல் இயங்கும் ஆம்புலன்ஸ்களால் உயிரிழப்புகள் அதிகமாகி றதா? இதற்கு ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனி மொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு மத்திய சுகாதாரத்துறை இணைய மைச்சர் பாரதி பர்வீன் பவார் அளித்த பதில் வருமாறு :-

மருத்துவ உட்கட்ட மைப்பு, அவசர கால மருத்து வத் தேவைகளை உறுதிப்ப டுத்துவது, ஆம்புலன்ஸ் வசதிகளை ஏற்படுத்துவது போன்றவை மாநில அரசுக ளின் நேரடி நிர்வாகத்தில் வருகின்றன. ஆனால் இந்த விஷயங்களை செயல்படுத்த மத்திய சுகாதார அமைச்சகம் மாநில அரசுகளுக்கு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவி களை வழங்குகிறது. மாநில அரசின் கோரிக்கைகளுக்கு ஏற்ப இந்த உதவிகள் வழங் கப்படுகின்றன.

ஆம்புலன்ஸ்களைப் பொருத்தவரை, அவற்றை கட்டுப்படுத்தும் கால் சென்டர்கள், ஜி.பி.எஸ். கருவி, குறைந்தபட்ச மருத் துவ உபகரணங்கள் ஆகிய வற்றுக்கான நடைமுறைச் செலவுகளை மாவட்ட அள விலான தொழில்நுட்ப வல்லு னர் கண்காணித்து சான்றிதழ் வழங்குகிறார். அதற்கேற்ப நிபந்தனைகளின் அடிப்ப டையில் ஒன்றிய அரசு அதற் கான நிதி உதவியை வழங்கு கிறது.

அவசர அழைப்பு வந்தவு டன் எவ்வளவு விரைவாக அந்த ஆம்புலன்ஸ் குறிப்பிட்ட இடத்தை அடை கிறது? ஒரு நாளைக்கு எத் தனை முறை அது பயன்படு கிறது? இதரப் பயன்பாடுகள் போன்றவற்றை கணக் கிட்டே ஒரு ஆம்புலன்ஸின் செயல்பாட்டுத்திறன் முடிவு செய்யப்படுகிறது.

ஆம்புலன்ஸ்களின் செயல் பாடுகளை, தரத்தை உயர்த் தும் வகையில் தேசிய சுகாரத் திட்டத்தின்கீழ் தேசிய ஆம் புலன்ஸ் சேவைகள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புதான் குறைந் தபட்ச உயிர்காக்கும் வசதி கள் கொண்ட ஆம்புலன்ஸ் கள், உயிர்காக்கும் நவீன வசதிகள் கொண்ட ஆம்பு லன்ஸ்கள், நோயாளிகளை அழைத்துச் செல்லும் வாக னங்கள் ஆகியவற்றை வாங்க உதவி செய்கிறது.

ஐந்து லட்சம் மக்கள் தொகைக்கு குறைந்தது ஒரு நவீன உயிர்காக்கும் கருவிகள் கொண்ட ஆம்புலன்ஸ் இருக்க வேண்டும்; ஒரு லட் சம் மக்கள் தொகைக்கு குறைந்தபட்ச உயிர்காக்கும் கருவிகள் கொண்ட ஒரு ஆம் புலன்ஸாவது இருக்க வேண் டும் என்று ஒன்றிய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

குறைந்தபட்சம் இந்த இலக்கை அடைய இன்னும் எத்தனை ஆம்புலன்ஸ்கள் தேவை என்பதை அறிந்து மாநில அரசுகள் அவற்றை வாங்கிக்கொள்ளலாம்.

இன்றைய தேதியில் நாடு முழுக்க 2,957 உயிர்காக்கும் நவீன கருவிகள் கொண்ட ஆம்புலன்ஸ்கள், 14,603 குறைந்தபட்ச உயிர்காக்கும் கருவிகள் கொண்ட ஆம்பு லன்ஸ்கள், 4,259 நோயாளி களின் பயணத்திற்கான வாக னங்கள், 17படகுகள், 81 இருசக்கர வாகனங்கள் ஆகி யவற்றுக்கு தேசிய சுகாதாரத் திட்டத்தின்கீழ் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர, மத்திய சாலைப் போக்குவரத்து மற் றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம்,ஒரு ஆம்புலன் ஸில் என்னவெல்லாம் வசதி கள் இருக்க வேண்டும், அதன் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கி தேசிய ஆம்புலன்ஸ் விதிகள் ஒன்றை உருவாக்கி வெளியிட்டிருக்கிறது. அரசுத் துறைகள், என்.ஜி.ஓ.க்கள் இந்த விதிமுறைகள் படி ஆம் புலன்ஸ்களை இயக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் பாரதி பர்வீன் பவார் பதில ளித்தார்.